# கடல்வலயத் தடைச் சட்டம் மீண்டும் அமுல்
# 19 பொருட்களுக்கு மீண்டும் தடை விதிப்பு

(கொழும்பு)
திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பீரங்கிக் கப்பல்கள் மீதான தாக்குதலையடுத்து, அரசு நேற்று முதல் மீண்டும் கடல் வலயத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளதுடன், வடபகுதி மீது தளர்த்தப்பட்டிருந்த பொருளாதாரத் தடையில் மீண்டும் 19 பொருட்கள் மீதும் தடை விதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்

(2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 7 இதழ் 75
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-04-1995

## கடற் கரும் புலிகள்
## நால்வர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
திருகோணமலை துறைமுகத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பீரங்கி கப்பல்கள் தகர்ப்பு தாக்குதலில் இரு பெண் கடற்கரும்புலிகள் உட்பட நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இத்தாக்குதலில் ★ கடற்

(6-ம் பககம் பார்க்க)



## அறிவியல் வளர்ச்சியை எமது மாணவரும் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது

### — தலைவர் பிரபாகரன் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)
இன்றைய உலகம் மாறி வருகிறது. துரிதகெதியில் முன்னேறி வருகிறது. அறிவியல் வளர்ச்சிப் போக்கில வியக்கத்தகு மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன மாறி வரும் இந்த புதிய உலகையும், அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள அறிவியல் வளர்ச்சிப் போக்கையும் எமது இளம் சமூகம் அறிந்து கொள்வது அவசியமாகும். இன்றைய உலகின் வளர்ச்சிக்கு ஏற்ப எமது சமூகத்தின் நிலையை உயர்த்திக்கொள்வதற்கு இந்தஅறிவு இன்றியமையாதது. இது காலத்தின் தேவையுமாகும்.

இவ்வாறு தியாகி அன்னை பூபதியின் 7- து ஆண்டு நினைவாக நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வையொட்டி

(5ம் பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகத்தில் வீரகாவியம்

# கடற் புலிகளின் தாக்குதலால்
# 2 பீரங்கிக் கப்பல்கள் மூழ்கடிப்பு!

## -11 படையினர் பலி; 23 பேர் படுகாயம் -

[திருமலை]
திருமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற கடற்படையினரின் இரு அதிவேக பீரங்கிகப்பல்கள், நேற்று அதிகாலை விடுதலைப்புலிகளின் கடற்கரும்புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு இலக்காகி தகர்த்தழிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. 'சூரயா' 'ரணசுறு' என்ற இருகடற்படைக் கப்பல்களும் தகர்க்கப்பட்டபோது அதிலிருந்த ஒரு கடற்படை அதிகாரி உட்பட 11 கடற்படையினர் உயிரிழந்ததுடன் 23 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

[6ம் பக்கம் பார்க்க]

## அதி உயர் பாதுகாப்பு மாநாடு

இரு பீரங்கிப் படகுகளும் தகர்க்கப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்று காலை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அதி உயர் பாதுகாப்பு சபை மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் முக்கிய அமைச்சர்களும், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் ஜனாதிபதியின் செயலரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் திருமலை சம்பவம் பற்றி மிக விரிவாக ஆராயப்பட்டதுடன் அடுத்த நடவடிக்கை குறித்து பல தரப்பினதும் அபிப்பிராயம் பெறப்பட்டது.

## அமைச்சரவையும் கூடியது

மோதல் தவிர்ப்பு உடன்பாடு மற்றும் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகிக்கொள்வதென்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பையடுத்தும் திருமலையில் கடற்படைக் கப்பல்கள் தகர்க்கப்பட்டதையுமடுத்து நேற்றுக்காலை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சரவைக்கூட்டம் அவசரமாகக் கூடியது. பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தை, வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் உட்பட பலரும இதில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் அனுப்பிய கடிதம் குறித்தும், நாட்டின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டு பல முடிவுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

## மண்டைதீவிலிருந்து
## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல், ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

முதலாவது தாக்குதல்

(6ம் பக்கம் பார்க்க)

## பலாலியில் இருந்து
## கடும் ஷெல் தாக்குதல்

(நெல்லியடி)
பலாலி இராணுவ முகாம் பகுதிகளில் நிலை கொண்டிருந்த படையினர் பத்தைமேனி, தம்பாலை, இடைக்காடு, அச்சுவேலி, ஒட்டகப்புலம், கைத்தொழிற்பேட்டை போன்ற இடங்களில் குடியிருப்புகள் மீது அகோரஷெல்

(6ம் பக்கம் பார்க்க)

## கப்பல் தகர்ப்பிற்கு
## அரசின் தவறு காரணமல்ல

### — பாலபத்தபெண்டி

(கொழும்பு)
அரசின் தவறான வழிகளால் தான் புலிகள் திருகோணமலையில் கப்பலைத் தகர்த்தார்கள் என்று சிலர் கூறுகிறார்கள் இது முற்றிலும் பொய்: சந்திரிகாவின் சமாதான முயற்சியை உலகமே பாராட்டியுள்ளது என்று ஜனாதிபதியின்

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசு தனது படைகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பாது

(கொழும்பு)

மீண்டும் ஒருமுறை இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்ப தயாராக இருக்காது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; இரண்டு தடவை இந்தியா இராணுவ ரீதியாக இலங்கையில் தலையிட்டிருக்கின்றது. 1971ல் ஜே. வி. பியின் கிளர்ச்சியை ஒடுக்க சிறிமாவோ அரசுக்கு இந்தியா நேரடியாக உதவியது, 1987ல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் மூலமாக தலையிட்டது.

1971ல் செய்த தலையீடு இலங்கை அரசோடு நட்புறவை இறுக்கமாக்கவும் இந்தியாவின் பலம் தொடர்பான பிரமிப்பை தக்கவைக்கவும் உதவியது,

1987ல் செய்த தலையீடு தெரியாத்தனமாக சேற்றுக்குள் காலை வைத்துவிட்டு எப்படி வெளியே எடுப்பது என்று திண்டாடிய நிலையில் முடிந்தது. எனவே மீண்டும் இந்தியா தலையிடும் என்று சொல்வதற்கில்லை. ரி

# 25,000 பற்றறிகள் படையினரால் பறிமுதல்

(வவுனியா)

வட பகுதிக்குள் 25,000 பென் ரோச் பற்றறிகளை கொண்டு செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி படையினரால் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

லொறி ஒன்றில் மறைத்து வைத்துக் கொண்டுவரப்பட்ட இந்த 25,000 பற்றறிகளையும் படையினர் பூனவ தடை முகாமில் வைதது நடாத்திய பரிசோதனையின்போது கைப்பற்றினராம்.

இந்த பற்றறிகளைக்கொண்டு வந்த லொறிச் சாரதியும், அதன் கிளினரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்களும் தடுத்து வைககப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது சி

## வாழைக்குலைகள் திருட்டு

(கொழும்புத்துறை)

உரும்பராய் பகுதியில் வாழைத்தோட்டங்களிலிருந்து நடுஇரவு நேரங்களில் வாழைக்குலைகள் திருடப்படும் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்-

(154)

## திருடப்பட்ட தாச்சிச்சட்டிகள் மீட்பு

(ஆனைப்பந்தி)

திருட்டுப்போன இரண்டு தாச்சிச் சட்டிகள் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன

கோவில் வீதியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து சுமார் 750 ரூபா பெறுமதியான இரண்டு தாச்சிகள் கடந்த 11ம்திகதி திருட்டுப்போனது.

திருடிய நபர் மறுநாளே கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து தாச்சிகள் மீட்கப்பட்டதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

101

# கடல் வலயத் தடைச்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

டது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

அரசாங்கம் 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி எழுதிய கடிதத்திற்கு, விடுதலைப் புலிகள் இயக்கம் 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி எழுதிய பதில் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இந்தக் கடிதத்தில் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி ஆரம்பமான மோதல் தவிர்ப்பை நிறுத்திக்கொள்வது எனத் தாம் தீர்மானித்திருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்தது

அந்தத் தகவல் கிடைத்த சில மணி நேரத்திற்குள் திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த இலங்கைக் கடற்படையின் இரண்டு வள்ளங்கள் கடலுக்கடியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் வெடித்தன. இது தற்கொலைப் படை மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாய் இருக்கலாம். இந்த குண்டு வெடிப்பின் விளைவால் கடற்படை வீரர்கள் சிலரும், விடுதலைப் புலிகள் அணியினரும்மரணமடைந்தனர். ஏனைய சிலர் காயமடைந்தனர்.

மோதல் தவிர்ப்பை நிறுத்தும் பட்சத்தில், எந்த ஒரு தரப்பும் 72 மணித்தியால முன்னறிவித்தல் கொடுக்க வேண்டுமென மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில் மோதல் தவிர்ப்புத் துண்டிக்கப்பட்டமை முன்னறிவித்தல் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது. அது மாத்திரமல்லாமல், அதனைத் தொடர்ந்து சில மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட மோதல் நடவடிக்கை, உயிருக்கும், அரசின் சொத்துக்கும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. பேச்சுவார்த்தைகள் நடந்ததன் காரணத்தால், எரிபொருள் உட்பட எஞ்சியிருந்த ஒரு சில பொருட்கள் மீதான தடையையும் அரசாங்கம் நீக்கியுள்ளது. 8 பொருட்கள் மாத்திரமே தற்போது தடை செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலில் இருக்கின்றன.

வடக்கு-கிழக்குக் கடலில் மீன் பிடிப்பது சம்பந்தமான தடை ஏறக்குறைய முழுமையாக நீக்கப்பட்டுள்ளது பாதுகாப்புப் படைகள் இருக்கும் முகாம்களைச் சுற்றி மாத்திரம் மிகக் குறைந்த கட்டுப்பாடுகள் உள்ளன இந்தப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை நீக்குவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகாகவும் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன,

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைத் துண்டித்துக்கொள்வதற்கும், மோதலை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப் பட்சமான தீர்மானத்தை எடுத்திருப்பதன் காரணமாக, அரசாங்கம் தனது தீர்மானங்களில் சிலவற்றை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

★ வடபகுதிக்கு 19பொருட்கள் கொண்டு செல்வது சம்பந்தமான தடை உடனடியாக மீண்டும் அமுல்படுத்தப்படும்.

★ அந்தப் பொருட்களின் விபரம் வருமாறு.- ஆயுதங்கள், துப்பாக்கிக் குண்டு, வெடி மருந்துகள், வாண வேடிக்கைப் பொருட்கள். தூரத்துக் கட்டுப்பாட்டுக் கருவிகள். ஹெல்மட்டுகள், மோட்டார் சைக்கிள்களுக்கான வண்ககளைத் தவிர, பூதக்கண்ணாடிகள், தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் - அதாவது ரெலஸ்கோப், திசை காட்டும் கருவிகள், பாதுகாப்புப்படைகளின் உடைகளை ஒத்த துணி வகைகள், இரும்புகள், இரும்புக் கூறுகள், பிராண வாயு, பற்றவைக்கும் சாதனங்கள், முட்கம்பிகள், கம்பி வெட்டும் கருவிகள், மண்ணெண்ணை தவிர்ந்த தீப்பற்றும் பொருட்கள், கற்பூரம்- சமயப்பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் கற்பூர கட்டிகளை தவிர, யூரியா உரம், பென் ரோச் பற்றறிகள், ஈயம், ஈயப் பொருட்கள், பெற்றோல், டீசல், மின்சாரவியல், இலத்திரனியல் சாதனங்கள் என்பனவாகும்.

★ 1995-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி இடப்பட்ட வர்த்தமானி மூலம் வழங்கப்பட்ட மீன் பிடி தடை நீக்கம் உடனடியாக ரத்துச் செய்யப்படுகின்றது. இந்தத் தினத்துக்கு முன்னர் இருந்த நிலைமை இப்போது அமுலுக்கு வரும்.

அனுமதிக்கப்பட்ட மீன் பிடிக்கும் பிரதேசங்கள் பற்றிய விபரங்கள் இன்று வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலில் தரப்படும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் 19ம் திகதி அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்டது காலக்கெடு அல்ல. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தினது பல்வேறு கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கு உத்தேசமாக தெரிவிக்கப்பட்ட ஒரு காலவரையறை மாத்திரமே என்பதை இந்த இயக்கம் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருந்தது. அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு அதிகபட்ச வசதிகளை ஏற படுத்திக் கொடுக்கும். தனது உறுதியான கொள்கையை ஆதாரமாகக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமீபகால கோரிக்கைகளைச் சாத்தியமான அளவுக்குக்கூடுதலாக ஏற்றுக்கொண்டிருப்பதை இம்மாதம் 12-ம் திகதி எழுதிய கடிதத்தின் மூலம் சுட்டிக்காட்டியது.

பொருத்தமான சூழ்நிலைகளை அவதானிக்கும்போது கடந்த 6 மாத காலங்களில் அரசாங்கம் வழங்கியுள்ள சலுகைகள் சாத்தியமான அளவு அதிகபட்ச எல்லையை அடைந்திருக்கின்றன. நாட்டின் சகல பாகங்களிலும் மக்களின் தேவைகளை பாரபட்சமில்லாமல் ஏற்படுத்திக் கொடுப்பது அதனது பொறுப்பு. அரசாங்கத்தின் கடமை; என்று உறுதியான மாற்றமுடியாத கொள்கையை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பின்பற்றி வந்திருக்கின்றது.

யுத்தம் தற்காலிகமாகவே ஓய்ந்திருக்கிறது. ஆனாலும் சமாதானம் பற்றி இன்னமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருந்தது.

மோதல் தவிர்ப்பை நிறுத்திக்கொள்வது என்று விடுதலைப் புலிகள் இயக்கம் எடுத்துள்ள தீர்மானம் இலங்கை மக்கள் அனைவரினதும் நன்கு தெளிவான அபிலாசைகளை முழுமையாக உதாசீனப்படுத்தும் ஒரு முடிவாகும், மக்களுக்கு எதிராக செயல்படும் அனைவரும் மக்களின் விரோதிகளாக கருதப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சம்பவம் சமாதான முயற்சிகளில் ஒரு கட்டத்தில் ஏற்பட்ட தற்காலிகமான பின்னடைவு மாத்திரமே என்று அரசாங்கம் கருதுகிறது.

எமது அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு இது ஒரு தோல்வியாகாது. இலங்கையில் வாழுகின்ற எல்லா மக்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இலங்கை மக்களின் அனைத்து பகுதியினரும் சமமாக நடத்தப்படுவதைஉறுதிப்படுத்தும் அதேவேளையில் யுத்தம் உட்பட இனப்பிரச்னைக்கு அமைதித் தீர்வை ஏற்படுத்துவது என்ற இந்த அரசாங்கத்தின் கொள்கையில் தமது நம்பிக்கையை இந்த நாட்டு மக்கள் உறுதிபட முன்வைத்தார்கள். சமீபத்தில் நடந்த தேர்தலிலும் வேறு மார்க்கங்களிலும் சமாதானத்துக்கான தமது ஆதரவை அவர்கள் வலியுறுத்தி இருந்தார்கள்

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களும் நாட்டில் வாழும் தமிழ், சிங்கள முஸ்லீம் சோதரர்களும் அரசாங்கத்தின் கொள்கையில் சமாதானத்தை அடைவது என்ற அதன் உறுதிபாட்டில் தமது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிபடுத்தி இருக்கிறார்கள் மோதல்களை விடுதலைப்புலிகள் இயக்கமே ஆரம்பித்தது அரசாங்கம் எந்தவிதமான ஆத்திரமூட்டலையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்கமும் படைகளும் சமாதானத்தை பேணுவதற்கு தம்மாலான சகலத்தையும் செய்திருக்கின்றனர்.

பாதுகாப்புப் படைகள் தற்போது ஆகக்கூடிய உஷார் நிலையில் வைககப்பட்டு இருக்கின்றன. இன்னுமொரு அழிவுகரமான யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு. தூண்டிவிட எடுக்கப்படும் சகல் முயற்சிகளையும் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் தன்னாலான சகலத்தையும் செய்யும்.

அரசாங்கம் சமாதானத்துக்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது. நாம் சமாதானத்துக்கான எமது முயற்சிசளை தொடர்ந்து மேற்கொள்வோம் இதனைச் சாதிப்பதற்கு விடுதலைப்புலிகளின் ஆதரவு மாத்திரமல்ல எமது நாட்டில் வாழும் சகல தமிழ் மக்களினதும் தொடர்ச்சியான நம்பிக்கை, ஆதரவு நல்லெண்ணம்ஆகியன எமக்கு முன் எப்போதையும் விட கூடுதலாகத் தேவைப்படுகிறது என்று அரசாங்கம் நம்புகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமகாலத்தில் எந்த அளவுக்கு உறுதியான நம்பிக்கை வைத்திருக்கின்றதோ. அந்த அளவுக்கு நாட்டின் இறமை தேசத்தின் பாதுகாப்பு மக்களின் ஐக்கியம் ஆகியவற்றை பாதுகாப்பதிலும் சமஅளவு பொறுப்பையுப் கொண்டிருக்கிறது. நிலைமையை உறுதி செய்வதற்கும் தேவையான சகலத்தையும் நாம் மேற்கொள்வோம். இந்த முக்கிய சந்தர்ப்பத்தில் இலங்கை மக்கள் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும். சுய நோக்கம் கொண்ட சக்திகள் பரப்பும் பொறுப்பற்ற பிரசாரங்களில் வழி தவறி சென்றுவிடக்கூடாது என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளது. ம-சி

நிவாரண முத்திரை பெறமுன்

# குழந்தைகளையும் பதிவுசெய்ய வேண்டும்

(ஆனைப்பந்தி)

வேலணை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிற் குட்பட்டோர் தமது ஆறு மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளை நிவாரண முத்திரைகள் வழங்கப்படுவதற்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது,

மதிப்பீடடுப் படிவத்தில் ஏற்ற மாற்றங்களை செய்வதற்காக இத்தகைய குழந்தைகளுக்கு தத்தமது பகுதி பிரதேச செயலர் பிரிவு அலுவலகங்களில் படிவத்தைப்பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டபின்னர் குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப் படமாட்டார்களென்றும் மேற படி பிரதேச செயலர் பிரிவு களின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 101

## தேவை

ஈழநாடு ஸ்தாபனத்திற்கு அனுபவமும், திறமையும் வாய்ந்தவர்களிடம் இருந்து கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆசிரியர் பகுதி**

பத்திரிகைத்துறையில் பட்டம் அல்லது அனுபவம் உடையவர்கள். ( ஆங்கிலம், சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும். )

**அச்சகப் பகுதி**

அச்சுக்கோர்ப்பாளர்கள் ( அனுபவம் உடையவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் )

**அச்சு இயந்திர இயக்குநர்கள்**

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

வயது : 40 வருடங்களுக்கு மேற்படலாகாது.
சம்பளம் : தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 30 - 04 - 95.

★ விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை, அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளும், நற்சான்றுப் பத்திரப் பிரதிகளும் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி ;

விளம்பர இல. ஏ-4878,
ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.

(ஏ-4878)

# பல்கலைக்கழக பிரச்னைகளுக்கு தீர்வுகாண விசேட கமிட்டி!

## ஜனதிபதி நியமித்தார்

(கொழும்பு)

பல்கலைக்கழக பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கென ஒரு கமிட்டியொன்றினை ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நியமித்துள்ளார்.

அமைச்சர் இந்திகா குணவர்த்தன தலைமையில் இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

1993-ம் ஆண்டுமுதல் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஊழியர்கள் சம்பள உயர்வு கோரிவந்தனர்,

1994ம் ஆண்டிலிருந்த சம்பளம் வழங்குவதாக பொ. ஐ. மு. அரசு அறிவித்துள்ளபோதிலும் 1993 ம் ஆண்டிலிருந்து தமக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டுமென பல்கலைக்கழக ஊழியர்கள் கோருகின்றனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதபட்சத்தில் அவர்கள் தமது பதவிகளை ராஜினுமா செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளனர்,

இதனல் உயர்கல்வி பயிலும் மாணவர்களில் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளதாக கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியுஅளனர்.

இதனையடுத்தே பல்கலைக்கழகங்களில் எழும் எந்தப் பிரச்னைகளையும் தீர்வுகாணும் பொருட்டு மேற்குறிப்பிட்ட குழு ஜனதிபதியினல் நியமிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு, ஊழியர் பிரச்னை உட்பட பல்கலைக்கழக மட்டத்திலான அனைத்துப் பிரச்னைகளையும் இந்தக் குழுவே தீர்மானித்து வைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ரி

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா கல்வியற் கல்லூரியில் ஆசிரியப் பயிலுநர்களாகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் யாழ். மாவட்ட பயிலுநருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 21-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் வவுனியாவிற்கான போக்குவரத்து பிரயாண ஒழுங்குகள் பற்றியதாக அமைவதால் சகல பயிலுநர்களையும் பிரயாண ஒழுங்குக்குத் தேவையான அனைத்து ஆவணங்களுடனும் வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர். -ரி

---

## மணிவாக்கு

அன்புடன் நாளைத் துவக்கி அன்புடன் நாளைக் கழிப்பாய். அன்புடன் நாளை முடிப்பாய், அன்பே இறைவனை அடையும் வழி, உண்மை என்பது எப்போதும் நிலையான ஒன்றே

— சத்தியசாயிபாபா.

---

## நமது நோக்கு

### புதிய நிலைப்பாடு

காலக்கெடுவிற்குள் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது.

அதனல் — பேச்சில் இருந்தும் போர் ஓய்வி லிருந்தும் விலகுவதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளார்கள்.

அரசாங்கத்தின் பதில்கள் மழுப்பல்களாகவும் இருந்து வந்துள்ளன,

புலிகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அரசு திட்டமிட்ட முறையில் காலம் தாழ்த்தி வந்துள்ளது

உதாரணமாக பொருளாதாரத் தடைநீக்கம் பற்றி ஜனதிபதி டில்லியில், கொழும்பில் உறுதிமொழி தந்தார்.

'உத்தேசிக்கப்பட்டிருக்கிறது' என்ற வார்த்தைப் பிரயோகத்தை உன்னிப்பாகக் கவனியாது, உடனடியாகக் காரியங்கள் நடைபெறும் எனக் கருதிய மக்கள் ஏமாந்து போனுர்கள்

வர்த்தமானி அறிவிப்பு உடன் வெளிவரவில்லை.

இதையெல்லாம் எவ்வளவு காலத்திற்குச் சகித்துக்கொண்டு, மக்கள் வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும்?

ஆட்சியாளரின் நடவடிக்கைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே

எனவே — அவர்களின் அன்ருடப் பிரச்னைகளைச் காலதாமதமின்றி நிறைவேற்றிவைக்கப்பட வேண்டும் என இங்கு மாத்திரமல்ல தெற்கிலும் பலர் குரல் கொடுத்து வந்தனர்.

'ராவய' பத்திரிகை ஆசிரியர் கூட யூரியா போன்றவற்றின் தடை பற்றி வெளிப்படையாகவே கருத்துக் கூறி இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி என்று கூறியுள்ளார்.

அரசு தரப்பினரின் ஆலோசனைகளைக் கூட எடுத்தெறிந்து. செயற்படுவது போலத் தெரிகிறது.

குறிப்பாக — கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்தனவே தவிர மக்கள் துன்பம் போக்கப்படவில்லை

இந்த நிலையில்... அரசு யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பேச்சுவார்த்தையில் இருந்து ஒருதரப்பு விலகுவதாளுல் அது ஏன் என்பதை ஆராய்ந்து அதற்குரிய நிவாரண நடவடிக்கைகளையே அரசு எடுக்க வேண்டும்!

---

## பலதும் பத்தும்

### நம்பிக்கை அப்படி!

மேற்கு நாடுகள் என்ருல் விஞ்ஞான வளர்ச்சி கண்ட நாடுகள்; எங்களுக்கு இருப்பது போலச் சிலவகை நம்பிக்கைகள் அங்கில்லை என எண்ணிக்கொண்டிருக்கிறோம்

அங்கும்— நம்பிக்கைகள் பல இன்னும் நீங்கவில்லை. உதாரணமாக... ஒல்லாந்தில் எல்லா விதமான இறைச்சிகளையும் உண்பார்கள். ஆனல் புருக்களை மட்டும் உண்பதில்லை.

புருக்கள் சமாதானச் சின்னம் என்பதால்தான் உண்பதில்லை என்றுதான் நினைக்கிறீர்களா? சங்கதி அப்படியல்ல...! குளிர்ந்த நாடல்லவா? அதனல் பலருக்கு மூட்டுவலி, வாதம் வருகிறதாம் இந்தப் புருக்கள் பறக்கும்போது இறகசைப்பதால் எழும் காற்றில் மருந்து சக்தி இருக்கிறதாம். அது அந்த நோய்களைத் தடுப்பதாக அவர்கள் நம்புகிறுர்கள்.

— மயூரன்

---

## யாழ். செயலகபிரிவிற்கு ரூ.10லட்சம்ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச செயலகப் பிரிவில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கென பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

இந்த நிதி அரசிடமிருந்து தற்போது கிடைத்துள்ளதால் உடனடியாகவே வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாக யாழ். பிரதேசச் செயலாளர் கலாநிதி க.குணராசா அறியத் தருகின்றுர்.

(154)

---

## முதியோருக்கான சேமநலத் திட்டம்

(கொழும்பு)

முதியோர்களுக்கென விசேட சேமநலத் திட்டங்கள் அடுத்த இரு மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

'நவோதய- என்னும் பெயரில் தேசிய ரீதியில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் நிதி உதவி புரிய முன்வந்துள்ளது.

உத்தேச திட்டத்தின்படி முதியோர் சேமநலன் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன, சொந்த விருப்பின் பேரில் முதியோருக்கான தொழில்முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (க)

---

## தாலிக்கொடி திருட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த ரதோற்சவத்தின்போது பெண் ஒருவரின் 11 தங்கப் பவுண் நிறையுள்ள தாலிக்கொடியொன்று திருட்டுப்போயுள்ளது.

ஆலய முன் பண்டபத்தில் முற்பகல் பக்தர்கள் கூட்டம் மிக நெருக்கமாக இருந்த சமயத்தில் வணங்கிக் கொண்டிருந்த சமயம் தமது தாலிக்கொடி அறுக்கப்பட்டதை உணர்ந்த அப்பெண் உடனே கூக்குரலிட்டு அழுதபோதிலும் கூட்டத்தோடு கூட்டமாக தாலிக்கொடி அறுத்தவர் தப்பிச் சென்றுவிட்டார். 72

---

## ஒளிப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இயங்கும் மாணவர் அறிவியல் கழகத்தில் இன்று பி. ப. 3 மணியிலிருந்து 4 மணி வரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலும் பி. ப. 4 மணியில் இருந்து 6 மணி வரை 'விஞ்ஞான ஒளிப்படக்காட்சி' யும் நடைபெறும்.

நாளை பி ப. 3 மணியில் இருந்து 4-30 மணி வரை ஆண்டு-11க்கான செயல்முறை வகுப்பு நடைபெறும். யூலின் விதியை வாய்ப்புப் பார்த்தல், மின்னின் காந்த விளைவுகளை வய்கப்புப் பார்த்தல் என்பன நடைபெறும்.

---

## இராசி பலன்

20-04-1995

வியாழக கிழமை

(தமிழுக்கு சித்திரை — 07)

பஞ்சமி காலை 6-59 வரை, முன்னிரவு 7-38 வரை சித்த யோகம், இராகுகாலம் நண்பகல் 1-32 முதல் 3-02வரை. சுபவேளை காலை 7-32 முதல் 9-02 வரை.

மேடம்: தாழ்மை நிலை, வீண் விரயம், தாமத பணி,

இடபம்: மனஸ்தாபம், துஷ்டர் சகவாசம், அலைச்சல்.

மிதுனம்: புத்திரர்மகிழ்ச்சி, தொழில் உறவு, வெகுமதி.

கடகம்: பயண நன்மை, காரியசித்தி நண்பர் உதவி.

சிங்கம்; திருட்டு போதல், பணமுடை, வீண்விவாதம்.

கன்னி: அமைதிக்குறைவு, இடம் பெயர்வு, மனச்சுமை.

துலாம்: முயற்சி கைகூடல், அதிகாரிகள் பாராட்டு, தியாகம்.

விருச்சிகம்: குடும்ப கவலை, தனிமைப்படல், ஆவேச உணர்வு.

தனுசு: தொழில் சிறப்பு, பிறர் ஏளனம், தெய்வ தரிசனம்.

மகரம்: மனைவியுடன் கருத்துமோதல், உடல் அசதி, கவலை.

கும்பம்: இனசன உறவு, நற்பணி, பிறர் அறிவுரை.

மீனம்: மன உற்சாகம். தொழில் உதவி, விருந்துண்ணல்.

— ஜோஸ்யர்

---

ராஜீவ் காந்தி கொலை முயற்சி:

## குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை

(புதுடில்லி)

1986-ம் ஆணடு ராஜ்காட்டில் அப்போது பிரதமராக இருந்த ராஜிவ்காந்தியை கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்ட சரண்சிங் என்ற நபருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த சதியில் ஈடுபட்ட வேறு மூவருக்கு 12 ஆண்டுகளுக்கு கடும் காவல்தண்டனை விதித்து புதுடில்லியிலுள்ள சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. -ரி

---

யாழ். மாவட்ட

## அரச உத்தியோகத்தர் சேவை பாராட்டப்பட வேண்டும்!

— அரச அதிபர்

(உடுவில்)

''1983 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் ஏற்பட்ட போர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றிய பலர் யாழ்ப்பாணத்துக்கு வெளியே இடமாற்றம் பெற்றும், அந்நிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடியும் சென்றுவிட்டார்கள். இன்னும் பலர் சலுகைகளை எதிர்பார்த்து சேவையில் இருந்தும் ஒய்வுபெற்றுவிட்கள். இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குதேவையான சேவையாளர் பன்மடங்கு தேவைப்படுகின்றனர். இவ்வளவு கஷ்டங்களின் மத்தியிலும் வெளியேருது இம் மாவட்டத்தில் தொடர்ந்து சேவையாற்றி வரும் உத்தியோத்தர்கள் நன்றி பாராட்டப்பட வேண்டியவர்கள்''

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற புத்தாண்டுக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவினரால் நடத்தப்பட்ட இப் புத்தாண்டுக் கலைவிழாவுக்கு உடுவில் பிரதேசசெயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமை வகித்தார்' அங்கு அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதவெது; யாழ்ப்பாண மாவட்டத்தில் 56 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுவாசல்கள், சொத்துக்களை எல்லாம் இழந்து 198 அகதி முகாங்களிலும் உறவினர்களுடனும் தங்கி வாழ்கின்றனர். இன்னும் 1 லட்சத்து 96 ஆயிரம் குடும்பங்கள் கிராமங்களிலிருந்து இடம் பெயராமல் வாழ்கின்றனர்.

தாம் உரிமை இழந்த காரணத்தால் இன்னல்கள் பல சூழ்ந்த வேளையிலும் தமிழ் மக்கள் அவற்றை பொருட்படுத்தாது உரிமை வேண்டுமென போராடி வருகின்ருர்கள்.

கலை. கலாசாரம், கல்வி சம்பந்தமாக இணைந்த விழாவில் சமுதாயம் வாழவேண்டும் என்ற நம்பிக்கையோடு செயற்பட வேண்டுமென்ருர். 109-சி

---

மேதினத்தின் மேன்மையினை காதினிக்க பறைசாற்று

பொது... யாழ்ப்... நல்லூர்

# சந்திரிகாவின் சமாதானம் கேள்விக்குறியாக இருக்கிறது

## அரசியல்கருத்தரங்கில் உரை

(உடுவில்)

யுத்தத்தை சாட்டாக வைத்து ஏற்படுத்தப்பட்டவையே பாதைத்தடை, கடல் வலயதடை, பொருளாதாரத் தடை ஆகியன. யுத்தம்இல்லையென்றால் பாதையைத் திறந்து விடுவதுதானே முறை,

உடுவில் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் மத்தியில் இன்றைய அரசியல் நிலை பற்றிக் கருத்துரை வழங்கிய கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த திரு.மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சு. இரத்தினராசா தலைமையில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. மனோகரன் மேலும் கூறியதாவது:

சமாதானத்துக்காக நாம் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களுடனும், ஜனாதிபதிகளுடனும் பேசினோம்.

டெல்லியில் தொடங்கி திம்பு - கொழும்பு - யாழ்ப்பாணம் வரை பேசியுள்ளோம. ஆனால் அப்பேச்சுக்களின் போதெல்லாம் எமது இனத்துக்கும் மொழிக்குமான தேசிய அந்தஸ்து தரப்படவில்லை என்பதால் ஒப்பந்தங்களில் நாம் கையொப்பமிடவில்லை

எந்த ஒரு நாட்டிலும் கூட கைதிகள் பரிமாற்றம் நிபந்தனை அடிப்படையில்தான் நிகழும். நாம் சமாதானத்தை நோக்காகக்கொண்டு பல யுத்தக்கைதிகளை எந்தவித நிபந்தனைகளுமின்றி விடுவித்தோம்.

நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் எவருக்கெதிராகவும் யுத்தப் பிரகடனம் செய்யவில்லை. போர் தொடுக்கவில்லை. எம் மீது தொடுக்கப்பட்ட போருக்கு முகம் கொடுக்கின்றோம் அடக்குமுறைகளுக்கெதிராக முகம் கொடுக்கிறோம்.

நாம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக போராடுகிறோம். யாரையும் கொலை வேண்டும் அழிக்கவேண்டும் எனப் போராடவில்லை.

தமிழரை அழிக்கத் தொடங்கிய யுத்தம் சிங்களவரை அழிக்க முற்பட்டபோதே போரை நிறுத்துமாறு சிங்களவர் கோருகின்றனர்.

எம்மிடம் அரசியல் இருக்கிறது. அரசு இருக்கவில்லை. ஒருநாட்டுக்குத் தேவையான அரசபடை எம்மிடம் உண்டு. எமக்கென ஒரு அரசை நிறுவி அதனை வழிநடத்தவே இன்று போராடுகிறோம்,

இந்த நாட்டில் நீதி சமாதானம், சமதர்மம் என்ற நிலைகளை சந்திரிகா அரசு ஏற்படுத்துமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. 109

## அதிபர் இடமாற்றம் குறித்து ஆட்சேபனை மகஜர்

(உடுவில்)

இமையாணன் மகாவித்தியாலய அதிபர் திரு. ம. குட்டித்தம்பி வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை மேற்படி மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன ஆட்சேபித்து கல்விப் பணிப்பாளருக்கு மகஜரொன்றைக் கையளித்துள்ளனர்.

மேற்படி அதிபருடைய இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறும் அல்லது அவரது தரத்துக்கு நிகரான பதவியில் உள்ள அதிபர் ஒருவரை நியமிக்குமாறும் அவர்கள் அம்மகஜரில்கோரியுள்ளனர். 109-ரி

## நுளம்புத் தொல்லை

(கொழும்புத்துறை)

யாழ். குருநகர்ப் பகுதியில் இரவில் நுளம்புத் தொல்லை கூடுதலாக இருக்கின்றது

இது விடயமாக யாழ், குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தினர் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டுள்ளதாக நிலையத் தலைவர் திரு. மோசேஸ்- எட்வேட்ஸ் தெரிவித்துள்ளார். 154

## ★ தமிழ்நாட்டில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமையும்?

(சென்னை)

தமிழகத்தில் தி. மு. க- காங்கிரஸ் கூட்டணி ஏற்படும் சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வருட இறுதியில் தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதால் காங்கிரசுடன் கூட்டணி அமைக்க தி. மு, கவும் விரும்புவதாக தெரிகிறது. தி. மு. க-காங்கிரஸ் கூட்டு அமைப்பதற்காக ஜனதா கட்சித் தலைவரும், சர்ச்சைக்குரிய அரசியல்வாதியுமான டாக்டர் சுப்பிரமணியசுவாமி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இ ரி

## தலைவராக மீண்டும் தெரிவு

(பண்டத்தரிப்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் சண்டிலிப்பாய் பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக திரு. ஆர். குருபரன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. வி தயாபரனும், பொருளாளராக திரு. கே. இலங்கேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். -72

## யாழ். ஆயருக்கு நயினாதீவில் வரவேற்பு

(அரியாலை)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தீவுகளுக்கு அண்மையில் விஜயம் செய்த யாழ், ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் நயினாதீவு இறங்குதுறையில் வைத்து வரவேற்கப்பட்டார். மத வேறுபாடின்றி மக்களால் வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நிறுவப்பட்டுள்ள புனித அந்தோனியார் சொரூபத்துக்கு முன்பாக வழிபாடுகள் ஆயர் தலைமையில் நடைபெற்றன.

அனலைதீவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்தார். அனலைதீவு பங்குத் தந்தை அருட் திரு. யூஜின் பிரான்சிஸ் சகிதம் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

தீவுப்பகுதிகளிலுள்ள சகல இடங்களிலுமுள்ள மக்களைச் சந்தித்து உரையாடினார் நோயாளர்களை ஆசீர்வதித்தார். 59-ரி

## அன்னை பூபதி போன்ற வீரத்தாய்மார்கள் பலர் தமிழீழத்தில்உருவாகவேண்டும்

— கவிஞர் வாஞ்சிநாதன்

(நெல்லியடி)

''ஸ்ரீலங்கா அரசு பாண், பருப்பு, பெற்றோல், டீசல், பற்றறிகளை எமக்குத் தருவதன் மூலம் பிரச்னை தீராது. நிரந்தரமாக, நிம்மதியாக நாம் வாழவேண்டுமாயின் அன்னை பூபதி அம்மா போன்ற பல வீரத் தாய்மார் தமிழீழத்தில் உருவாகவேண்டும்''

இவ்வாறு அன்னை பூபதியின் உண்ணாநோன்பு வைபவத்தில் பேசிய கடற்புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்,

மாலிசந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் வடமராட்சி தனியார் கல்வி ஒன்றியத் தலைவர் திரு. சங்கரலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறிபதாவது; முன்னைய எமது தமிழ்த் தலைவர்கள் காலிமுகத் திடலிலும், கச்சேரி வாசலிலும் சத்தியாக்கிரகம் இருந்த சமயம் பெரும்பான்மை இனத்தவர்களால் தாக்கப்பட்டனர். அப்போது அவர்களிடம் ஆயுதம் இருக்கவில்லை.

இன்று எமது தேசிய தலைவரின் போராட்ட காலத்தில் ஸ்ரீலங்கா அரசு உலங்கு வானூர்தி மூலம் தமது பிரதிநிதிகளை இங்கு பேச்சுவார்த்தைக்கு அனுப்புகிறார்கள். இதற்குக் காரணம் எம்மிடம் உள்ள ஆயுதபலம் என்றும் அவர் தெரிவித்தார். -160

## சொற்பொழிவு

(நெல்லியடி)

உடுப்பிட்டி வல்லை வாளி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு,கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் மகா பாரதம்' என்னும்தலைப்பில் சமய செற்பொழிவை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இரவு 7மணி முதல் 8-15 வரைநிகழ்த்திவருகின்றார். 160

## பேராதனைபல்கலைகழகத்தின் அசமந்தப் போக்கு

(கொழும்பு)

1990-ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து இடம் பெயர்ந்து பேராதனை பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பெரும் இன்னலை எதிர்நோக்கியுள்ளதுடன் அவர்கள் தொழில் பெற முடியாத அவலநிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதே ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டு அவர்கள் கடந்த ஆண்டு பொது நிர்வாக அமைச்சின்கீழ் பட்டதாரி பயிலுநர் நியமனமும் பெற்றுள்ளார்கள்.

பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் அசமந்தப் போக்கே இந்நிலைமைக்குக் காரணம் என்றும் கூறப்பட்டது. -க-இ

## தமிழக மீனவருக்கு 'வாக்கிடோக்கி'வசதி

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் காலங்களில் அவர்களுக்கு ஆபத்து நேரும்போது கரையுடன் தொடர்பு கொள்வதற்கான வசதியை மத்திய கடலோர மேம்பாட்டுத்துறை உருவாக்கியிருக்கிறது:

இதற்கென ஏழு இடங்களில் உயர் அலைவரிசைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தூத்துக்குடியிலும், நாகபட்டினத்திலும் இவை செயல்படத் தொடங்கியுள்ளன.

மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்லும் வாக்கிடோக்கிகள் மூலம் கரைக்கு தொடர்பு கொள்ள இது வசதியாக அமைந்துள்ளது,

உயர் அலைவரிசைக் கோபுரங்களின் உதவியுடன் கரையிலிருந்து நூறு கிலோ மீற்றர் தொலைவில இருந்தாலும்கூட மீனவர்கள் கரைக்கு தகவல் வழங்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக சுமார் நூறு வாக் டோக்கிகள் மீனவர்களுக்கு வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

## சமாதானமுயற்சிக்குராணுவம் ஆதரவு வழங்க வேண்டும்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு சமாதானத்தீர்வு ஒன்றைக் காண புதிய அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது இதற்கு முழு ஆதரவையும் வழங்குவது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள சகலரினதும் கடமையாகும் என்று இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி, வசாவிளான் இராணுவ முகாமில் கடந்த 13 ந் திகதி நடைபெற்ற புத்தாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 8-ந் திகதி மோதல்தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் இராணுவத்தினர் தமது கடமையை முறையாகச் செய்து வருகின்றார்கள். மோதல தவிர்ப்பு உடன்பாட்டை தொடர்ந்தும் கடைப்பிடித்து இந்த சமாதான முயற்சி வெற்றியளிக்க உதவ வேண்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார். -ம-சி

## வலிகாமம்பிரதேசபகுதியில் நடமாடும் செயலகம்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம்மேற்கு பிரதேச செயலகம் இவ்வருடம் நடாத்திவரும் நடமாடும் செயலக அமர்வுத்தொடரின் 5வது நடமாடும் செயலக அமர்வு இம் மாதம் 29ம் திகதி சனிக்கிழமையன்று சுழிபுரம்வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலி மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த செயலக அமர்வில் பனிப்புலம்' பண்ணாகம், சுழிபுரம் கிழக்கு ஆகிய மூன்று கிராம அலுவலர்கள் பிரிவுகளின் பொதுமக்கள் தெரிவிக்கும் முக்கிய பிரச்னைகள் ஆராயப்பட்டு தீர்த்து வைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது,

திருமணப்பதிவு; பிறப்புப் பதிவு, வைத்தியம், சுகாதார சேவை, கல்விச்சேவை, விற்பனவுச் சேவை முதலான இன்னோரன்ன பல சேவைகள் இங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 72-139

# 'மே' நாள் எழுச்சிகரமாக முன்னெடுக்க ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

மே நாளை எழுச்சிகரமாக முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் நாட்களில் கருத்தரங்குகளும் தெருக்கூத்துக்களும் நடாத்தப்படவுள்ளன.

வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெருமளவு கலந்துகொண்டு இதற்கான வேலைத்திட்டங்களை வகுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை நேற்றுமுன்தினம் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய வரலாற்றுக் கட்டத்தை அடைந்துள்ள இவ் வேளையில் மக்கள் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் மேதின செயற்பாடுகள் அமைய வேண்டும்,

அரச, வங்கி, கூட்டுத்தாபன கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களின் மத்தியிலும், வெகுஜன அமைப்புகள் ரீதியாகவும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், பத்திரிகைகளில் வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மே தினத்தின் மேன்மையை வலியுறுத்தி அறிக்கைகள் வெளியிடல் வேண்டும்.

பேரணியில கலந்துகொள்ளும் ஊர்திகள் பின்வரும் அளவு பிரமாணங்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். உயரம் 12 அடி, அகலம் 11 அடி. நீளம் 22 அடிகள். ஊர்திகளைத் தயாரிக்கும் வெகுஜன அமைப்புகளின் பெயர் விபரங்கள் ஊர்திகளின் முன் பின்னுகப் பொறிக்கப்படல் வேண்டும். கூடுமானவரை ஊர்திகளில் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பது தவிர்க்கப்பட்டு, விடயங்கள் உத்திகள் ரீதியாக வெளிக்கொணரப் படவேண்டும்.

ஊர்திகள் தயாரிப்பது சம்பந்தமாக ஆலோசனைகளை யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகத்திடம் பெற்றுக்கொள்ள வேண்டும்,

பின்வரும் விடயங்களை ஊர்திகள் பிரதிபலிக்க வேண்டும். தேசிய விடுதலைப் போராட்ட வரலாறும், மனதைத் தொடும் சம்பவங்களும், பேரினவாதம் தோற்றுவித்துள்ள பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் உழைக்கும் மக்கள் முனைப்பாக செயற்படுவதால் சுயசார்புப் பொருளாதாரம் மேம்பாடுபெறுதல். பேரினவாதத்தின் இன்றைய பல்வேறு முகங்கள், தமிழீழ மக்களை ஏமாற்றி திசை திருப்பும் சிறீலங்கா அரசின் திட்டங்கள், மக்கள் அனைவரும் கூட்டாக செயற்பட்டு பலம் பெறல், பெண் விடுதலை, சுரண்டலற்ற, அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்க மக்களது பங்களிப்பு, எம்மீதான அனைத்துலகப் பார்வை, கல்வி மேம்பாடு, மாவீரரைப் போற்றுதல்.

தமிழீழ மக்கள் மீது புதிய வடிவங்களில் அரசியல் இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிப்பினும் அவற்றிற்கு தமிழ் மக்கள் முகங்கொடுத்து எதிர்கொள்ளத் தயாராக உள்ளனர் என்பதை அனைத்துலகமும் புரிந்துகொள்ளும் வகையில் இவ் வருடத்திய மே நாள் ஏற்பாடுகள் மிகப் பெருமளவில் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். -ரி

# அன்னை பூபதி நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

**தியாகச்சுடர் அன்னை பூபதியின் 7ம்** ஆண்டு நினைவுநாள் நேற்று யாழ். குடாநாடு பூராவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள் தோறும் சிவப்பு மஞ்சள் வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்னை பூபதியின் உருவப்படம் யாழ் நகர் வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றி மக்கள் மலரஞ்சலி செலுத்தியதைக் காணக் கூடியதாக இருந்தது

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு உண்ணாவிரதங்கள், சிரமதானப் பணிகள் பல்வேறு அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டன. அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெற்றன.

பல இடங்களில் அன்னை பூபதியின் உருவப்படம் வைத்துச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. ஒலிபெருக்கிகள் மூலம் அஞ்சலி கீதங்கள் ஒலிபரப்பப்பட்டன.

யாழ். நகர் சனநடமாட்டமின்றி நேற்று வெறிச்சோடிக் கிடந்தது. யாழ். நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன, வர்த்தக நிலையங்களின் வாசல்களில் அன்னை பூபதியின் உருவப் படம் வைத்து தீபம் ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று வர்த்தக விடுமுறையென வணிகர் கழகம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. 162

## நாவற்குழி இரு இடங்கள்

(கொழும்புத்துறை)

தென்மராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் நாவற்குழி மகாவித்தியாலயம் இரு இடங்களைப் பெற்று மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியது. 154

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–04–20

வியாழன் இரவு

8-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
8-10 சித்த மருத்துவ குறிப்புகள்
8-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் 'உங்களுக்குத் தெரியுமா?'' சித்திரம்
8-30 செய்திகள்
8-40 மொழியும் வாழ்வும்
8-50 எங்களின் தேசம்

1995–04–21

வெள்ளி காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலைக் கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–04–20

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிக்கீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 பொன் விளையும் பூமி
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 கேள்வி - பதில் - விளையாட்டுத் தொடர் பானவை
6-25 என் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# கொடுமையை எதிர்த்து குரல் எழுப்புபவன் கவிஞன்

(கொழும்புத்துறை)

**கவிஞன் என்பவன்** தூய உள்ளம் படைத்தவன். அநீதியை எதிர்ப்பவன். கொடுமையை எதிர்த்து குரல எழுப்பும் உள்ளம் படைத்தவன். அத்தகைய கவிஞனாக யாழமுதன் சில கவிதைகளை படைத்துள்ளார்.

இவ்வாறு யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் மூதறிஞர் சொக்கன் தலைமையில் இடம்பெற்ற கவிஞர் யாழமுதனின் கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் திரு எஸ். பி. கிருஷ்ணன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; நடைபெறுகின்ற இந்தப் போரில் எங்கள் ஒவ்வொருவருக்குமே பங்களிப்பு இருக்கிறது. அதை நாங்கள் நிறைவேற்றவில்லையென்றால் விடுதலை காண நீண்ட நாட்கள் எடுக்கும் தினமும் போராளிகளை இழந்துகொண்டிருக்கின்றோம். அதிலும் பன்மடங்கில் தமிழ் மக்களை இழந்தோம். அரச சிறைகளில் எமது இளைஞர்கள் சித்திரவதையை அனுபவிக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தை நோக்கினால் அங்குள்ள தமிழர் படும் இன்னல்களை அறியும்போது கவலையளிக்கிறது; அங்கே எம் சகோதரர்கள் சொல்லொணா துன்பங்கள் கொடுமைகள நடுவில் சாவோடு போராடுகிறார்கள். இங்கே உணவுப் பொருள் விலை அதிகம் என்று பேசுகிறோம். அங்கே தமிழன் எடுத்துச் செல்லும் உணவுப் பொருளை பறித்து எறிகிறார்கள். எதிரி ஆட்சியினர் எம்மை ஏமாற்றி சலுகைகளை திணித்து போரை முடித்துவிட நினைக்கிறார்கள். ஏமாறுவதற்கு புலிப்படை தயாராக இல்லை என்பதையும் நன்குணர்ந்துள்ளார்கள்;

இந்நிலையில் படைப்பாளிகள் போர் வரலாற்றை எழுதவேண்டும். பாடவேண்டும் என்ற குரல் பலமாகக் கேட்கிறது. கவிஞரே புலி வீரரைப் பற்றிப் பாடுங்கள். போர்ப்பரணி பாடுங்கள்.

பிரமஸ்ரீ கந்தசாம்ப சிவாச்சாரியார், வாகீசக் கலாநிதி க. நாகேஸ்வரன், திரு. வே. பாலகுமாரன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வு யாழ். நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் இடம் பெற்றது. 144

## அறிவியல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மனித ஆற்றலுக்கும் ஆளுமைவளர்ச்சிக்கும் பொது அறிவு ஆதாரமானது பொது அறிவு வாயிலாகவே மனித வாழ்வு பற்றியும் உலக நடப்பியல் பற்றியும் நாம் ஆழமாகப் புரிந்து கொள்ளலாம். வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கு இது அவசியமானது.

எமது மாணவ சமூகம் துறைசார் கல்வியுடன் நின்றுவிடாது பொது அறிவுத்திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஆக்கபூர்வமான ஊக்குவிப்புக்கள் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். இந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு ஆண்டு தோறும் நடத்திவரும் பொது அறிவுத்தேர்வு ஒரு சிறந்த தூண்டுதலாக அமைகிறது இப்பொது அறிவுத்தேர்வை தற்கொடையாளி அன்னை பூபதி நினைவாக நடத்துவது சாலப் பொருத்தமாகும்.

இன்றைய இடர்மிகுந்த காலத்திலும் பொது அறிவைப் பெறும் ஊடகங்கள் அருகிவிட்ட சூழ்நிலையிலும் ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான மாணவர்கள் இப்பொது அறிவுத்தேர்வில் தோற்றியுள்ளனர். பொது அறிவுத் திறனை வளர்த்து கொள்வதில் மாணவரிடையே பெருகிவரும் ஆர்வத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

இந்தேர்விலே தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இத்தேர்வு சிறப்புற நடைபெறத் துணைநின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் இத்தேர்விலே சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் எனது நல் வாழ்த்துக்கள். பொது அறிவுத்துறையில் வியத்தகு ஆற்றலைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வரும் மாணவன் செல்வன் வி. கோகுலனுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். சி

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை அப்புக்குட்டி

| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 25 – 06 – 1928 | 07 – 04 – 1988 |

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்த அன்புத் தந்தையே - ஐயா என்று அழைத்த இதழ்கள் அழையாது ஓய்ந்த ஆண்டுகள் ( 7 ) (ஏழு) மறைந்தாலும் உங்கள் அன்பும் கனிவும் நிறைந்த ஐயா எம் நெஞ்சத்தை விட்டு ஒருபோதும் நீங்காதையா ஆறுமோ நம் துயரம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடிகளை வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

[சி-1461]

[1ம் பக்கத் தொடர்ச்சி]

# படைத் தளபதிகள் விரைவு

திருமலை துறைமுகப் பகுதியில் கடற்படை கப்பல்கள் தகர்க்கப்பட்ட சம்பவத்தையடுத்து அவ்விடத்திற்கு உடனடியாக கடற்படைத்தளபதியும், இராணுவ தளபதியும் விஷேட ஹெலிகொப்டரில் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதல் படைத்தலைமைக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதையடுத்து திருமலை சென்ற தளபதிகள் அங்கிருந்த பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்ந்ததுடன் திருமலைப் பகுதியில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் கடற்படை' இராணுவ அதிகாரிகளுடன் விவாதித்துள்ளனர்.

# படைத் தலைமை அதிர்ச்சி

திருமலைத் துறைமுகத்தில் நடைபெற்ற கடற் கரும்புலிகளின் துணிகரத் தாக்குதலால் பாதுகாப்பு வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளது மிகவும் பாதுகாப்பெனக் கருதப்படும் இத்துறைமுகத்துடன் அமைந்துள்ள கடற்படைத் தளத்தில் நின்ற கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையானது, மிகவும் உஷார் நிலையிலிருந்த படைத் தலைமைக்குப் பெரும் அதிர்ச்சியாக அமைந்துள்ளதெனவும் கூறப்படுகிறது. இதையடுத்து திருமலைத் துறைமுகப் பகுதி படையினரால் முற்றுகையிடப்பட்டு, காலை முதல் மாலை வரை பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது, மேலும் திருமலை நகரப் பகுதி பெரும் பதற்றத்துடன் காணப்படுகின்றது.

# கண்டதும் சுடுமாறு உத்தரவு

திருமலையில் பீரங்கி படகுகள் தகர்க்கப்பட்ட சம்பவத்தையடுத்து இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வருவோர் மீது கண்டதும் சுடுமாறு படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு கடும் உத்தரவு வழங்கியுள்ளது, மேலும் படையினருக்கு தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறும் பாதுகாப்பு அமைச்சர் படைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் வடக்கு - கிழக்கு யுத்தமுனைப் பகுதியில் நேற்று காலை முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# படைகள் முழு உஷார் நிலையில்

திருமலையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்தும், அவர்கள் சமாதானப் பேச்சிலும், மோதல் தவிர்ப்பிலும் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்ததையும் அடுத்து, நாடு முழுவதும் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. வடக்கு-கிழக்கில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் அதேவேளை, கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், நாட்டின் ஏனைய முக்கிய நகரங்களிலும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை படையினரின் லீவுகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டு, அவர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# சடலங்கள் யாவும் மீட்பு

விடுதலைப் புலிகளின் தாக்குதலால் தகர்க்கப்பட்ட இரு பீரங்கிக்கப்பல்களிலுமிருந்து உயிரிழந்த பதினொரு கடற்படையினரதும் சடலங்களை சுழியோடிகளால் பல மணி நேரங்கள் தேடிய பின்பே கண்டுபிடித்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேற்றுமாலை கடற்படை சுழியோடிகளின் தேடுதலில் இவ்விருகப்பல்களையும் தகர்த்து வீரச்சாவடைந்த இரு பெண் புலிகள் உட்பட நான்கு கடற்கரும்புலிகளின் உடல்களையும் சுழியோடிகள் மீட்டதாகவும் படைவட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

# விசாரணைக்கு அவசர உத்தரவு

திருமலையில் கடற்படைக்கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது இத்தாக்குதலுக்கு காரணம் யார்? இத்தாக்குதல் நடக்கக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்ன என்பது குறித்தும் விசாரணைக்கென பாதுகாப்பு அமைச்சு உயர்மட்ட விசாரணைக்குழுவொன்றை நியமித்திருப்பதுடன் விசாரணை அறிக்கையை மிக விரைவில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 3-ம் ஈழப்போர் ஆரம்பம்?

விடுதலைப் புலிகளின் நேற்றைய தாக்குதல் புலிகள் தங்களின் 3-ம் ஈழப்போரை ஆரம்பித்து விட்டதாக கருதலாம் என்றும் புலிகள் பல தாக்குதல்களை தொடர்ந்து மேற்கொள்ளக் கூடுமெனவும் இத்தாக்குதல்களை நடாத்த புலிகள் முன்பே திட்டமிட்டிருந்ததாகவும் இராணுவம் கூறியுள்ளது. இதேவேளை புலிகள் 3-ம் ஈழப்போரை துவக்குவதானால் இத்தகைய சிறுதாக்குதல்களைவிட பெரிய தாக்குதலையே நடாத்தியிருப்பார்கள் எனவும் புலிகளுக்கு போரைத் தொடங்க வேண்டும் என்பதை விட அரசுக்கு அழுத்தம் தந்து தமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாயிருக்கக் கூடுமென கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு தூதரகங்கள் கூறியுள்ளன.

# பதில் தாக்குதல் உடன் இல்லை

விடுதலைப் புலிகள் திருமலையில் தாக்குதல் நடாத்தியிருந்தாலும் தாங்கள் பதிலுக்கு உடனடியாக தாக்கப் போவதில்லை எனவும் புலிகளிடமிருந்து தொடர்ந்து தாக்குதல நடந்தால் இராணுவம் பதில் தாக்குதலில் ஈடுபடுமெனவும் பாதுகாப்பு உயர் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் ஜனாதிபதி சந்திரிகாவும் தீர்மானித்ததாக ஏ. எவ். பி. செய்தி கூறியது. மேலும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடரும் எனவும் அரசு அதிகாரிகள் கூறியதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

# சாமாதானப்பேச்சு முறிந்தது?

திருமலையில் நடைபெற்ற தாக்குதலால் சமாதானப் பேச்சு வார்த்தை முறிந்து விட்டது போன்ற சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேநேரம் திருமலை தாக்குதல் சம்பவத்தினால் பொது மக்கள் ஆத்திரமடையாமல் நிதானத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர்திரு ரணில் விக்கிரமசிங்கா நாட்டுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அபிவிருத்தி திட்டம் பாழாகும்

மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமானால் அரசாங்கம் திட்டமிட்டவாறு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் பாழாய்ப் போய்விடும் என்று பொருளாதாரக் கொள்கை வகுப்பு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த அதிகாரியான சமன் கலகமன் தெரிவித்தாக 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. திருமலையில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து போர் மூண்டால் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்கள் யாவும் சிதைந்துவிடும் என்றும் ராய்ட்டர் செய்தி மேலும் தெரிவித்தது.

# தெற்கில் வதந்தி பரவுகிறது

திருமலையில் இடம் பெற்ற கடற்படை கப்பல்கள் மீதான தாக்குதலையும், மோதல் தவிர்ப்பு மற்றும் சமாதான பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதாக அறிவித்ததையும் தொடர்ந்து தெற்கில் பல்வேறு வதந்திகள் பரவத் தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான வதந்திகளை நம்பவேண்டாமெனவும் மக்களை அமைதியாக இருக்குமாறும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இதேவேளை கொழும்பு உட்பட நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் ஒருவித பதற்றம் நிலவியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கிரிவிம

யாழ். குடாவில்

# விமான நடமாட்டம்

## பெருமளவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் விமான நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வலிகாமம் பகுதியில் நேற்றுக்காலை முதல் ஹெலிகொப்டர்கள் அடிக்கடி பறந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் வடமராட்சிப் பகுதியிலும், வல்லை வெளிப் பகுதியிலும் ஹெலிகள் சுற்றி வட்டமிட்டவண்ணமிருந்தன.

இதேவேளை நேற்றுக்காலை முதல் கொழும்புக்கும் பலாலிக்குமிடையில் அடிக்கடி விமானங்கள் சென்று திரும்பிய வண்ணமிருந்தன.

71-சி

### நரோமா கப்பல் சேவை ரத்து

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை திருகோணமலையிலிருந்துபருத்தித்துறைக்குப் புறப்பட இருந்த 'நரோமா' பயணிகள் கப்பல், இயந்திரக் கோளாறு காரணமாகப் புறப்படவில்லை என்று நேற்று மாலை 5-15 மணியளவில் யாழ். அரச அதிபருக்குச் செய்தி கிடைத்துள்ளது. இக்கப்பலில் இன்று 20ம் திகதி செல்வதற்குப் பதிவு செய்த பயணிகள் பருத்தித்துறைத் துறைமுகத்திற்குச் செல்லவேண்டாம் என்று கேட்கப்படுவதுடன், மீண்டும் செல்லும் நாள், நேரம் பற்றி இன்று மாலை யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

### திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடலுக்கடியால வந்த விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் துறைமுகத்தில் தரித்து நின்ற இரு பீரங்கிப் படகுகளை அடுத்தடுத்து தகர்த்தனர். அதிகாலை ஒரு மணிக்கு முதல் கப்பல் தகர்க்கப்பட்டது.

சீனத் தயாரிப்பான சங்காய் ரகத்தைச் சேர்ந்த 'சூரியா' தாக்குதலையடுத்து உடனடியாகவே பாரிய சேதத்துடன் முற்றாக கடலில் மூழ்கியது. மற்றையகப்பலான 'ரணசுறு' பலத்த சேதமடைந்த நிலையில் ஒரு பகுதி கடலில் மூழ்கிய நிலையில் காணப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

கடலுக்கடியால் சுழியோடி வந்து தற்கொலைப்படையினர் கப்பல்களைத் தகர்த்தழித்த போது துறைமுக இறங்கு துறைப் பகுதியும் பலத்தசேதமடைந்ததுடன் பாரிய குண்டுச் சத்தமும் கேட்டதாக துறைமுகத்திலிருந்தவர்கள் தெரிவித்தனர். புலிகளின் இத்தாக்குதலால் இரு பீரங்கிக் கப்பல்களும் தகர்த்தழிக்கப்பட்டதை கடற்படை பிராந்திய தளபதி அட்மிரல் சிசில் திசேரா பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இத்தாக்குதலினால் இரு பீரங்கிக் கப்பல்களிலுமிருந்த 12 கடற்படையினர் உயிரிழந்ததுடன் 23 கடற்படையினர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த பலர் கடவில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாயிருப்பதாக ஆஸ்பததிரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தையடுத்து திருமலை கடற்படைத்தளத்தினதும் துறைமுகத்தினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் சீனன்குடாவிமானப் படைத் தளத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(சி-ரி-வி)

### மண்டைதீவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

12-30 மணியளவிலும் இரண்டாவது தாக்குதல் பிற்பகல் 2-10 மணியளவிலும் இடம் பெற்றன. இந்த ஷெல்கள் பண்ணைக் கடற்கரையோரப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து யாழ். நகர்ப் பகுதி சிறிது நேரம் பதற்றம் அடைந்து காணப்பட்டது.

க சி

### பலாலியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீச்சுக்களையும் துப்பாக்கி வேட்டுக்களையும் நேற்றிரவு 10.30 மணிமுதல் 11.00 மணி வரை ஏவியுள்ளனர்.

இதனால் இப்பகுதிகளில் வசித்த மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு நித்திரையிலிருந்து விழித்தெழுந்து ஆவரங்கால் புத்தூர் போனற இடங்களில் வீதியோரங்களிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்ததைக் காணமுடிந்தது.

இதேவேளை வளலாய்ப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் வல்லைப் பகுதியை நோக்கியும துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

படையினர் ஷெல் வீச்சை நடாத்திக் கொண்டிருக்கையில் ஹெலிகொப்டர் ஒன்றும் சுமார் ஒரு மணி நேரமாகக் குறிப்பிட்ட பகுதிகளை பல தடவைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

நேற்று அதிகாலையும் நண்பகலும் கெலிகொப்டர் ஒன்று வடமராட்சிப்பகுதியிலும் பல தடவை வட்டமிட்டு பலாலி சென்று மறைந்தது. 160-சி

### கடற் கரும் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரும்புலி மேஜர் கதிரவன் (பரந்தன்] ★ கடற்கரும் புலி மேஜர் தணிகைமாறன் (குய்க்மாறன்) ★ கடற்கரும்புலி மேஜர் மதுஷா (குச்சவெளி திருமலை) ★ கடற்கரும்புலி கப்டன் சாந்தா (புங்குடுதீவு) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

சி

### கப்பல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் பாலபத்த பெண்டி பி. பி. சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது: அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன் எடுத்துச் செல்வதாக கூறியுள்ளது. அது எந்த வழியில் முன் எடுத்துச் செல்லப்படும் என்பதை நாம் இன்னும் தீர்மானிக்வில்லை.

விடுதலைப் புலிகள் நடத்திய தற்போதைய தாக்குதலுக்கு எதிராக அரசாங்கம் தாக்குதலில் இறங்குவதாக இல்லை. மேலும் தாக்குதல் தொடர்ந்தால் பதில் தாக்குதல் இடம் பெறலாம்.

இந்தத் தாக்குதலை விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள் என்று கூறுவதற்கில்லை விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன என்றார். ம-சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Lieence number B/1633613,